4	புதன்	நற்கருணை வீரர் அவை மறைவட்ட விழா – கூத்தென்குழி
5	வியாழன்	நற்கருணை வீரர் அவை மறைவட்ட விழா–பிஷப் ரோச் ஹால், சின்னக்கோயில் வளாகம், தூத்துக்குடி
6	வெள்ளி	நற்கருணை வீரர் அவை மறைவட்ட விழா – புனித செபமாலை மாதா திருத்தலம், பெரியசாமிபுரம்
8	ஞாயிறு	ஞாயிறு மறைக்கல்வி மாணவர்கள் திருப்பலி & மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தரங்கு, லயன்ஸ் டவுண்
9	திங்கள்	பல்சமய உரையாடல் மன்றக் கூட்டம் – நற்செய்தி நடுவம்
12	வியாழன்	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டாய்வு – புனித அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மச்சாதுநகர் – தூத்துக்குடி
13	வெள்ளி	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டாய்வு – தஸ்நேவிஸ் மாதா தொ.பள்ளி & மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி
14	சனி	பல்சமய குழந்தைகள் தினம்
15	ஞாயிறு	மரியியல் சான்றிதழ் பயிற்சி 14 – ஸ்டேட் பாங்க் காலனி

17	செவ்வாய்	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக்கல்வி ஆண்டாய்வு-தருவைகுளம், வெள்ளப்பட்டி
18	புதன்	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக்கல்வி ஆண்டாய்வு - புனித தாமஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இன்னாசியார்புரம் (6-8 வகுப்புகள்)
22	ஞாயிறு	கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா நற்கருணை வீரர் அவை திருவிழா
23	திங்கள்	மறைப்பணி அருள்சகோதரிகள், வேதியர்கள் மாதாந்திர தியானம்
26	வியாழன்	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டாய்வு - திருச்சிலுவை தொ.பள்ளி & திருச்சிலுவை பெண்கள் மே.நி.பள்ளி, தூத்துக்குடி
29	ஞாயிறு	கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டி-மணப்பாடு மறைவட்டம்

நற்கருணை வீரர் அவை விழா
(கிறிஸ்து அரசர் பெருவிழா)-2026

அன்பிற்கினியவர்களே! நமது பங்குகளிலும், நடுநிலை மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் நற்கருணை வீரர் அவை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பது சிறப்புக்குரியதாகும். 22.11.2026 (ஞாயிறு) அன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவினை நற்கருணை வீரர் அவை உறுப்பினர்களைக் கொண்டு அனைத்துப் பங்குகளிலும், வாய்ப்புள்ள நாள்களிலும் பள்ளிகளிலும் சிறப்பாகக் கொண்டாடிட அன்புடன் நினைவூட்டுகிறோம். அதற்கான அறிக்கைகள் பங்கு சார்பாகவும், பள்ளி சார்பாகவும் தனித்தனியாக நற்செய்தி நடுவத்திற்கு அனுப்பிட நினைவூட்டுகிறேன்.

- ❖ 21.11.2026 சனி அன்று மாலை ஆராதனையும் 22.11.2026 ஞாயிறு அன்று சிறப்புத் திருப்பலியும், தொடர்ந்து நற்கருணை எழுந்தேற்றம் மற்றும் நற்கருணை ஆசீரும் நடத்தலாம். நற்கருணை வீரர்களை சபையில் சேர்க்கும் நிகழ்வும் நடத்தப்பட வேண்டும்.
- ❖ வருடந்தோறும் மறைவட்ட அளவில் நடைபெறும் நற்கருணை வீரர் அவையினருக்கான மறைவட்ட விழா நமது மறைவட்டத்தில் நடைபெறும் தகவல்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

- ❖ ஒவ்வொரு மறைவட்டத்திலும் பள்ளிக்கு 6 மாணவர்களும் மாணவர்களின் பெற்றோரும் குறைந்தபட்சம் பெற்றோரில் யாரேனும் ஒருவர்) நற்கருணை வீரர் அவை கண்காணிப்பாளர் ஆசிரியரும் வரவேண்டும்.
- ❖ கண்காணிப்பாளர்கள் கூட்டத்தில் கலந்துரையாடியதன் அடிப்படையில் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட திருவழிபாட்டு நிகழ்வுகளுக்கான பொறுப்புகளை தயாரித்து வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.
- ❖ வழக்கம்போல நற்கருணை வீரர் அவை விழாவிற்கு பள்ளி சார்பான நன்கொடைகள், திருப்பலி காணிக்கைகள் கொண்டு வரவும்.
- ❖ மதிய உணவு வழங்கப்படும்.
- ❖ பள்ளிகள் இல்லாத பங்குகளில் ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர் அல்லது அருள்சகோதரிகளின் உதவியோடு மாணவ, மாணவியரை மறைவட்ட விழாவில் பெற்றோரோடு பங்கேற்க அழைத்து வாருங்கள்.

அருட்பணி. பென்சிகர் லூசன்
பணிகள் ஒருங்கிணைப்பாளர், இயக்குநர்
செல்: 94891-23607(P), 94426-12318(O)

❖❖❖❖❖❖

பொதுநிலையினர் பணியகம் – தூத்துக்குடி

பணித்திட்டம், நவம்பர் – 2026

நாள்	கிழமை	பணி	இடம்
01.11.26	ஞாயிறு	குடும்ப வளர்வாழ்வுப் பயிற்சி	தூத்துக்குடி
01.11.26	ஞாயிறு	பங்கு மேய்ப்புப் பணிக்குழுத் தேர்தல்	இடிந்தகரை
03.11.26	செவ்வாய்	அன்பியங்கள் சந்திப்பு	கூத்தன்குழி
07 & 08.11.26	சனி, ஞாயிறு	திருமணத் தயாரிப்புப் பயிற்சி	உவரி
07 & 08.11.26	சனி, ஞாயிறு	மலரும் மண உறவு வார இறுதிப் பயிற்சி	திருச்சி
08.11.26	ஞாயிறு	பெண்கள் பணிக்குழு உருவாக்கம்	பாத்திமா நகர்

	ஞாயிறு	மரியாயின் சேனை கொமித்சிய கூட்டம்	சின்னக்கோயில் வளாகம்
10.11.26	செவ்வாய்	அன்பியங்கள் சந்திப்பு	கூத்தன்குழி
12.11.26	வியாழன்	பெண்கள் பணிக் குழுவினரின் பாலியல் விழிப்புணர்வு பயிற்சி	திருக்குடும்ப நடுநிலைப்பள்ளி, கால்டுவெல்காலனி
12.11.26	வியாழன்	பெண்கள் பணிக் குழுவினரின் பாலியல் விழிப்புணர்வு பயிற்சி	பாத்திமா நடுநிலைப்பள்ளி, பாத்திமாநகர்
12.11.26	வியாழன்	பெண்கள் பணிக் குழுவினரின் பாலியல் விழிப்புணர்வு பயிற்சி	சார்லஸ் நடுநிலைப்பள்ளி, சிதம்பரநகர்
15.11.26	ஞாயிறு	குடும்ப வளர்வாழ்வுப் பயிற்சி	தூத்துக்குடி
15.11.26	ஞாயிறு	சிறப்பு திருமணத் தயாரிப்புப் பயிற்சி	லூசியா மையம்
15.11.26	ஞாயிறு	மலரும் மண உறவு பாடப் பயிற்சி	புனித அந்தோணியார் மற்றும் ஸ்டேட் பேங்க் காலனி பங்குகள்.
15.11.26	ஞாயிறு	பங்கு மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி	லூர்தம்மாள்புரம்
15.11.26	ஞாயிறு	பெண்கள் பணிக்குழு உருவாக்கம்	லயன்ஸ் டவுண்
17.11.26	செவ்வாய்	அன்பியங்கள் சந்திப்பு	சேர்ந்தப்பூ–மங்கலம்
17.11.26	செவ்வாய்	அன்பியங்கள் சந்திப்பு	கூத்தன்குழி
18.11.26	புதன்	மறைமாவட்ட அளவிலான கலை இலக்கிய போட்டி	பொதுநிலையினர் பணியகம், தூத்துக்குடி
21 & 22.11.26	சனி, ஞாயிறு	திருமணத் தயாரிப்புப் பயிற்சி	வீரபாண்டியன்–பட்டணம்
22.11.26	ஞாயிறு	குடும்ப வளர்வாழ்வுப் பயிற்சி	வீரபாண்டியன்–பட்டணம்

22.11.26	ஞாயிறு	மலரும் மண உறவு திட்டமிடல் கூட்டம்	ஆயர் இல்லம்
24.11.26	செவ்வாய்	மரியாயின் சேனை– தொடர்பாளர் மற்றும் வளர்ச்சிப் பணிக்குழுக் கூட்டம்	சின்னக்கோயில் வளாகம்
29.11.26	ஞாயிறு	தூத்துக்குடி மறைமாவட்ட தமிழக அன்பிய வெள்ளிவிழா மாநாடு	ஆயர் ரோச் மண்டபம், தூத்துக்குடி.
30.11.26	திங்கள்	மரித்த மலரும் மண உறவுத் தம்பதியர்களுக்கான சிறப்பு வழிபாடு	ஆயர் இல்லம்

குடும்ப வளர் வாழ்வுப் பயிற்சி (திருமுழுக்கு)

01.11.2026, ஞாயிறு – பொதுநிலையினர் பணியகம், தூத்துக்குடி
15.11.2026, ஞாயிறு – பொதுநிலையினர் பணியகம், தூத்துக்குடி
22.11.2026, ஞாயிறு – வீரபாண்டியன்பட்டணம்

திருமணத் தயாரிப்புப் பயிற்சி

07, 08.11.2026 – சனி, ஞாயிறு – உவரி
21, 22.11.2026 – சனி, ஞாயிறு – வீரபாண்டியன்பட்டணம்

ஒவ்வொரு புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் தூத்துக்குடி பொதுநிலையினர் பணியகத்தில் திருமணத் தயாரிப்புப் பயிற்சி (கிறிஸ்மஸ், புத்தாண்டு வாரங்கள் தவிர) வழக்கம் போல் நடைபெறும். இரண்டாம் நாள் மதியம் 02.00 மணி முதல் 04.30 மணி வரை நடைபெறும் பெற்றோருக்கானப் பயிற்சியில் தாய், தந்தை இருவரும் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தவும்.

டிசம்பர் மாதத்தில் திருமணத் தயாரிப்புப் பயிற்சியில் நாள் மாற்றம்

டிசம்பர் மாதத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு அவ்வாரத்தில் மட்டும் செவ்வாய், புதன் கிழமைகளில் (22.12.2026 மற்றும் 23.12.2026) திருமணத்தயாரிப்புப் பயிற்சி நடைபெறும். அதே போல் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அவ்வாரத்தில் மட்டும் செவ்வாய், புதன் கிழமைகளில் (29.12.2026 மற்றும் 30.12.2026) திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும்.

திருமண யூபிலி விழாக் கொண்டாட்டம்

பாசமிகு பங்குத்தந்தை அவர்களுக்கு

வணக்கம். பொதுநிலையினர் பணியகத்தின் வாழ்த்துகள்!

திருமண வாழ்வில் 25, 50 ஆண்டுகளை நிறைவு செய்த தம்பதியருக்கு ஒவ்வொரு ஆண்டும் நம் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் யூபிலிக் கொண்டாட்டம் நடைபெறுவது தாங்கள் அறிந்ததே! இந்த ஆண்டு வருகின்ற டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி கால்டுவெல் காலனி, பொதுநிலையினர் பணியகத்தில் வைத்து தம்பதியருக்கான யூபிலி விழா நடைபெற உள்ளது. ஆகவே தங்கள் பங்கில் 1976 (சனவரி டிசம்பர்), 2001 (சனவரி டிசம்பர்) ஆம் ஆண்டுகளில் திருமணம் முடிந்த பொன்விழா, வெள்ளிவிழா தம்பதியரின் பெயர், திருமண நாள், தொடர்பு எண், முகவரியை நவம்பர் மாதம் 30 ம் தேதிக்கு முன் அஞ்சல்/புலனம் (Whatsapp) மூலமாக அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நாள் : 20.12.2026 - ஞாயிறு

நேரம் : காலை 09.30 மணி முதல் மாலை 04.00 மணி வரை

தலைமை : மேதகு ஆயர் ஸ்டீபன், தூத்துக்குடி மறைமாவட்டம்.

இடம் : பொதுநிலையினர் பணியகம், குழந்தை இயேசு திருத்தல வளாகம், 5/333A, 3-வது தெரு, கால்டுவெல் காலனி, தூத்துக்குடி - 628008

தொடர்புக்கு : 94 87 85 28 08 (புலனம் (Whatsapp) வசதி உள்ளது.)

97 50 29 62 33 பணி. சதீஷ்குமார்

97 88 67 49 24 பணி. ஜெயகர்

குறிப்பு : விழாவிலும், விருந்திலும் யூபிலி (வெள்ளிவிழா, பொன்விழா) தம்பதியர்களோடு இருவர் மட்டும் கலந்து கொள்ளலாம்.

அன்புத் தோழமையில்,

அருட்பணி. சே.சதீஷ்குமார்

இயக்குநர்

செல்: 97502-96233 (P); 94878-52808(O)

❖❖❖❖❖❖

இளையோர் பணியகம், TMSSS வளாகம், தூத்துக்குடி

நவம்பர் - 2026 பணித்திட்டம்

01.11.2026, காலை 06.30 - புனித தோமையார் ஆலயம், கூடுதாழை.

08.11.2026, காலை 06.30 - புனித அந்தோணியார் ஆலயம், தூத்துக்குடி.

15.11.2026, காலை 07.00 - புனித இஞ்ஞாசியார் ஆலயம், இனிகோ நகர்.

22.11.2026, காலை 07.00 - புனித சூசையப்பர் ஆலயம், உடன்குடி.

29.11.2026 - YCS மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம், ஆயர் இல்லம், தூத்துக்குடி.

அருட்பணி. சுதர்சன் L.,
இயக்குநர்
செல்: 94897-46891

❖❖❖❖❖❖

இறை அழைத்தல் பணியகம், தூத்துக்குடி

மேதகு. ரோச் ஆண்டகை குருமாணவர் நிதி

21.09.2026 முதல் 20.10.2026 வரை

எண்	பங்கின் பெயர்	வரவு
	சிறுமலர் குருமட அதிபர் தந்தையின் வழியாக	
1	இஞ்ஞாசியார் பங்கு	2500
2	குருஸ்புரம் பங்கு	27025
3	பாத்திமாநகர் பங்கு	10250
4	உவரி பங்கு	17000
5	குரும்பூர் பங்கு	1000
6	PVR புரம்	3300
7	லயன்ஸ் டவுன் பங்கு	10050
8	ரத்தினபுரம் பங்கு	2000
9	அழகப்பபுரம் பங்கு	49950
10	காந்திநகர் பங்கு	21850
11	ஸ்டேட் பேங்க் காலணி பங்கு	1000
12	அன்பர்கள் - 4 நபர்கள்	6500
13	அண்ணாநகர் பங்கு	2350
14	ரீத்தம்மாள்புரம் பங்கு	2550
15	பத்திநாதபுரம் பங்கு	6675

16	துறைமுகப் பங்கு	1000
17	தூய பனிமய அன்னை பேராலயப் பங்கு	1350
18	காவல்கிணறு பங்கு	19800
19	VP பட்டிணம்	7500
20	தாளமுத்துநகர் பங்கு	1250
21	லூர்தம்மாள்புரம் பங்கு	2000
22	கால்டுவெல்ட் காலனி பங்கு	5000
23	ராஜப்பாளயம் பங்கு	2000

கத்தோலிக்கப் பள்ளிகள் மற்றும் துறவற மடம்

24	St. Aloysius Girls HSS, Tuticorin.	5500
25	RC Primary School, Siluvaipatti	1000
26	RC Primary School, T. Saveriyarpuram	700
27	RC Primary School, Alangarathattu	500
28	RC Primary School, Cruzpuram	2400
29	St. Anne's Convent, Cruzpuram	600
	மொத்தம்	**214600**

மறைமாவட்ட பொருளாளர் தந்தையின் அலுவலகம் வழியாக

30	Mr. Joseph, G. Patnam	2000
31	Antony Arul Thanaraj	2000
32	Andrew, Lucia	200
33	St. Joseph's Girls' HSS, Sathankulam	1100
34	Mrs. Selvarani, OLS	3000
35	Rathnapuram Parish	500
36	Mr. Ruston, Uvari	500
37	Mrs. Antonyammal Inbadas, Uvari	500
	மொத்தம்	**9800**
	சிறுமலர் குருமட அதிபர் தந்தையின் வழியாக	**214600**
	மறைமாவட்ட பொருளாளர் தந்தையின் அலுவலகம் வழியாக	**9800**
	மொத்தம்	**224400**

அருட்பணி. உபர்ட்டஸ்
அதிபர்
செல்: 95970-41392

❖❖❖❖❖❖

TMSSS – போதை நோய் நலவாழ்வு பணிக்குழு
சூசைநாதர் புதுவாழ்வு மையம்

தூத்தக்குடி மறைமாவட்ட ஆயர் அவர்கள் 30.08.2026 அன்று காலை டிவைன் மெர்சி தியான இல்லத்தில் அமைந்துள்ள தியான கட்டிடத்தில் சூசைநாதர் புதுவாழ்வு மையத்தை ஆசீர்வதித்து மது போதை நலவாழ்வு பணிகளை மேற்கொள்ள அர்ப்பணித்தார்கள். சூசைநாதர் புதுவாழ்வு மையம் தூத்துக்குடி பல்நோக்கு சமூகசேவை சங்கத்தின் ஒரு அங்கமாக செயல்படுகிறது. சூசைநாதர் புதுவாழ்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளராக திரு. டொனோஃபன் செயல்படுகிறார். அவர்களுடன் நிர்வாக குழுவும், மருத்துவ குழுவும் மேலும் சில பணியாளர்களுமாக மொத்தம் 19 பேர் பணியாற்றுகிறார்கள். 25 உள் நோயாளிகள் பராமரிக்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உள் நோயாளிகள் மொத்தம் 30 நாள்கள் சிகிச்சை பெற வேண்டும்.

- ❖ முதல் மூன்று நாட்களில் மது நச்சு நீக்கம் செய்ய சிகிச்சை வழங்கப்படும்.
- ❖ மீதி 27 நாட்கள் நான்கு வாரங்களாக் அடித்தளம் & உயிர்பிழைத்தல் தொடர்பான உளவியல் பயிற்சியும், நம்பிக்கை மேலும் திடமான முடிவெடுத்தல் குறித்த வழிகாட்டுதலும், சுய ஆய்வு அடிப்படைகள் குறித்த ஆய்வும், இறுதியாக தொடர் முயற்சியும் மேலும் அன்றாட வாழ்க்கையை குறித்த ஆழமான பயிறிசியும் வழங்கப்படும்.
- ❖ முறையான மனநல மருத்துவர், பொதுநல மருத்துவர், செவிலியர்கள், உளவியல் ஆலோசகர்கள் மூலமாக உள்நோயாளிகள் சரியாக பராமரிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படும்.
- ❖ சிகிச்சை பெறுவதற்கான தொகை ரூ.20,000/-

இறையருளுடன் குணமளித்தல் பெற்று புதுவாழ்வு பெற்றவர்களாக வாழ நம் பிள்ளைகளுக்கு வழிகாட்டுவோம்.

செப்டம்பர் 8ஆம் தேதி முதல் இன்று வரை 17 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தொடர்ந்து அவர்களுக்காக செபிப்போம்.



அருட்பணி. பிரதீஷ் அ. கட்டார்
செயலர் – போதைநோய் நலவாழ்வு பணிக்குழு
செல்: 89030-00522

❖❖❖❖❖❖

From the Desk of the Priest-In-Charge of Properties

Dear Fathers,

Greetings to you from the property desk.

A note regarding the lands in the name of the diocese, which are under the maintenance and protection of your parish, was sent to you earlier. Since a few Fathers mentioned that they did not receive it, it is being sent again separately for each parish. Please verify the details of the lands based on this information list. Also, kindly ensure that the copy/ documents for those lands are available at the parish office. At the very least, ensure that the deed **(**பத்திரம்**)** and patta are available for every land. If you do not have a copy based on the note regarding the lands, please contact the Diocesan Property In-charge office.

Secondly, please kindly visit the location where these lands are situated. Ensure that the lands are safe and free from encroachments. If there are any encroached lands or any rule violations, please contact the Diocesan Property In-charge office. Office staff will contact you to confirm whether you have received this information list. If it is not received by you via post, it will be sent to you via WhatsApp. We kindly request your kind cooperation and support for this important task.

Thank you.

Rev. Fr. Sahayaraj Valdharis
Property In-Charge
Mob : 81484-81383 (Office),
Email ID : tdapropertydesk@gmail.com

❖❖❖❖❖❖

உரிமை வாழ்வுப் பணிக்குழுச் செயல்பாடுகள்

04.11.2026, புதன் மாலை 4 மணி – NDCL சமத்துவ கிறித்தவ சிந்தனையாளர் கூட்டம், ஆயர் இல்லம்

08.11.2026, ஞாயிறு காலை 9 மணி – புதிய இல்லத் திறப்பு விழா. நத்தைக்குளம் அடைக்கலாபுரம் பங்கு. தலைமை மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள்.

திரு. அ. யூஜின்
செயலர்
செல்: 96004-02272

திருத்தந்தையின் உலகளாவிய இறைவேண்டல் பணிக்குழு (PWPN)

அன்பு நிறைந்த குழுவினரே,

நாம் அனைவரும் தொடர்ந்து கூட்டியக்க கத்தோலிக்க திரு அவைக்காக செபிப்போம்.

வழக்கம் போல் வரும் 16.11.2026, திங்கட்கிழமை அன்று நற்செய்தி நடுவம், பத்திநாதர்புரம் சிற்றாலயத்தில் வைத்து மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை பரிந்துரை செபம் மீட்பரின் நற்செய்தி குழுவினர்கள் வழிநடத்துவார்கள். அனைவரும் கலந்து கொண்டு தொடர்ந்து செபிக்கவும். வரமுடியாதவர்கள் அந்நேரத்தில் செபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. T. ரேமண்ட் மஸ்கரனாஸ்,
இயக்குநர்
செல்: 94422-33319

❖❖❖❖❖❖

தென் மறைமண்டல நிகழ்வுகள்

பணிக்குழுக்களின் பயணம்

பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பகமும் பொறுப்பருள் பணியகமும்

நன்கொடைப் பணிகள்

- ❖ 11.10.2026, ஞாயிறு – கடகுளம் திருவிழாவின் போது, கடந்த ஆண்டு விடுபட்ட வீடுகளில் நன்கொடை பெறல். (பணி. எட்வர்ட், பணி. வெனி) பங்குப் பணியாளர்: பணி. ரெவின்.
- ❖ நற்செய்தி அறிவிப்புக் காணிக்கை பெறப்பட்டபின், நவம்பர் மாதத்தில் பத்து நாள்கள், தலைமைப் பங்கு வடக்கன்குளத்தில் வீடுகளுக்குச் சென்று நன்கொடை பெறல்.
- ❖ டிசம்பர் 02, 03 நாள்களில் சவேரியார் திருவிழா நடைபெறும் ஊர்களுள் ஒன்றிரண்டு இடங்களில் நன்கொடை பெறல்.

இதுவரை 40 ஊர்களில் இப்பணிக்காக நுழைந்துள்ளோம். பிற ஊர்களில் ஏதுவான ஒரு நாள் தொடர்பாக மக்கள் பங்குத்தந்தையோடு இணைந்து திட்டம் வகுத்துத் தருவது பெருமகிழ்வோடு வரவேற்கப்படுகிறது. புதிய மறைமாவட்டக் கட்டமைப்புப் பணிகளுக்காக ஒவ்வோர் ஊரும் ஒவ்வொரு வீடும் தத்தமது பங்களிப்பை உளம் உவந்து செய்தல் நன்று. இவ்ஆர்வமிகு செயல்பாடு கடவுளுக்கு ஏற்புடைய ஒன்று என்று நம்புவதும் நன்று.

சிறப்புக் கூட்டம் :

- ❖ 11.10.2026, ஞாயிறு, பிற்பகலில், வடக்கன்குளத்தில், குழந்தை இயேசுவின் புனித தெரசாவின் திருப்பண்டப் பேழையின் வருகை செயல்திட்டம் தொடர்பான திட்டமிடல் அமர்வு நடைபெற்றது. குருக்கள்

15 பேர், துறவிகள் பத்துப்பேர், பொதுநிலையினர் 25 பேர் என 50 பேர் ஆர்வத்தோடு பங்கேற்றனர். பத்துக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

❖ இக்குழுக்களுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் 13.10.2026, செவ்வாய்க் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. அக்டோபர் 20 செவ்வாய் அன்று நடந்த விழா மிக நன்று.

சிறப்புச் செய்தி :

❖ நவம்பர் திங்களில் நடைபெறும் ஆண்டுத் திருவழிபாடு (தியானம்) (09-13), புனே ஞானதீபாவில் நூற்றாண்டு விழா நிகழ்வுகளும் (23-30), பாப்பிறை குருமடத்தில் கருத்தமர்வும் ஆகியவற்றில் பங்கேற்பு.

அருள்பணி. செ.ரெ.வெனிசு குமார்
பொறுப்பருள் பணியாளர்
அலைப்பேசி : 9487075022
எனேவல் : 9677995583

❖❖❖❖❖❖❖

திருவிவிலியப் பணிக்குழு – தென் மறைமண்டலம்
2026 நவம்பர் மாத செயல்பாட்டுத் திட்டம்

01.11.2026 ஞாயிறு	–	ஆன்மாக்களுக்காக மன்றாடும் சிறப்புக் காணொளி வெளியீடு
02.11.2026 திங்கள்	–	திடீர் திருவிவிலிய சந்திப்பு
03.11.2026 செவ்வாய்	–	1. தினம் ஒரு விளையாட்டு – வெளியீடு
	–	2. பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டாய்வு
04.11.2026 புதன்	–	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டாய்வு
06.11.2026 வெள்ளி	–	பள்ளிகளில் மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டாய்வு
07.11.2026 சனி	–	பல்சமய உரையாடலுக்கான களப்பணி
08.11.2026 ஞாயிறு	–	1. ஞாயிறு மறைக்கல்வி பார்வையிடல்
	–	2. இளம் மறைபரப்பு பணியாளர்கள் பயிற்சி (பீடப்பூக்களுக்கானது)
09 – 13.11.2026,	–	ஆண்டு தியானம்
(திங்கள்–வெள்ளி)		
15.11.2026, ஞாயிறு	–	1. ஞாயிறு மறைக்கல்வி பார்வையிடல்
	–	2. இளம் மறைபரப்பு பணியாளர்கள் பயிற்சி (பீடப்பூக்களுக்கானது)

18.11.2026 புதன் – நற்கருணை வீரர் அவை மாநாடு, வடக்கன்குளம்
20.11.2026 வெள்ளி – நற்கருணை வீரர் அவை மாநாடு, சாத்தான்குளம்
22.11.2026 ஞாயிறு – 1. ஞாயிறு மறைக்கல்வி பார்வையிடல்
– 2. இளம் மறைபரப்பு பணியாளர்கள் பயிற்சி (பீடப்பூக்களுக்கானது)
29.11.2026 ஞாயிறு – 1. ஞாயிறு மறைக்கல்வி பார்வையிடல்
– 2. இளம் மறைபரப்பு பணியாளர்கள் பயிற்சி (பீடப்பூக்களுக்கானது)

ஆண்டவரில் அகமகிழும்

அருள்தந்தை. பிரான்சிஸ் கிறிஸ்துராஜா
இயக்குநர்
மன்னார்புரம்
செல்: 83001-57752

❖❖❖❖❖❖

இளைஞர் பணிக்குழு
நவம்பர் மாத பணித்திட்டங்கள்

இயக்குநர் தந்தையின் நவம்பர் மாத பங்கு சந்திப்புகள்

01.11.2026 – ரஜகிருஷ்ணபுரம் பங்கு இளைஞர்கள் சந்திப்பு
01.11.2026 – திசையன்விளை பங்கு இளைஞர் சந்திப்பு
08.11.2026 – பணகுடி பங்கு இளைஞர்கள் சந்திப்பு
15.11.2026 – அணைக்கரை பங்கு இளைஞர்கள் சந்திப்பு மிட்டார்குளம்கிளைப்பங்கு, வாழைத்தோட்டம்கிளைப்பங்கு
22.11.2026 – ராதாபுரம் பங்கு இளைஞர்கள் சந்திப்பு
29.11.2026 – C. சவேரியார்புரம் பங்கு இளைஞர்கள் சந்திப்பு

நவம்பர் மாதம் சந்திக்கப்படும் பள்ளிகள்

புனித அன்னாள் உயர்நிலைப்பள்ளி, தட்டார்மடம்.
ஆர். சி. நடுநிலைப்பள்ளி, அணைக்கரை.
ஆர். சி. நடுநிலைப்பள்ளி, மிட்டார்தார்குளம்.
திரு இருதய ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சாத்தான்குளம்.
புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, சாத்தான்குளம்
புனித அந்தோனியார் நடுநிலைப்பள்ளி, காரங்காடு
புனித வளன் நடுநிலைப்பள்ளி, தம்புபுரம்
திருஇருதய மேல்நிலைப்பள்ளி, பணகுடி

புனித பாத்திமா மேல்நிலைபள்ளி, வள்ளியூர்

புனித திருச்சிலுவை நடுநிலைப்பள்ளி, வள்ளியூர்

நிர்மலா ஆர்.சி. நடுநிலைப்பள்ளி, வள்ளியூர்

நவம்பர் மாத சிறப்பு செயல்பாடுகள்

இளைஞர் இயக்கத்தில்:

- நவம்பர் 02க்கு முன்பாக அவரவர் ஊரின் கல்லறை தோட்டத்தை சுத்தம் செய்தல், கண்டுகொள்ளபடாத கல்லறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
- செயல்படாத ஒன்றியங்களில் செபமாலை, ஒன்றிய பொதுக்குழு கூட்டம் நடத்துதல்
- நவம்பர் 22 ஆம் தேதி காவல்கிணறு பங்கில் பெண்கள் வன்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி, கருத்தமர்வு, கலைநிகழ்வு

இளம் மாணாக்கர் இயக்கத்தில்:

- இளம் மாணாக்கர் இயக்க கலைநிகழ்வு நடத்துதல், இடம் – அணைக்கரை மறுவாழ்வு இல்லம்
- நவம்பர் மாதம் சுற்றுசூழல் மாதமாக சிறப்பிக்கப்படுகிறது. நெகிழிப் பயன்பாடு குறைப்பு, இயற்கை வளம் பேணல் குறித்த விழிப்புணர்வு வழங்கப்படல்

அருள்பணி. சைமன் ஆல்டஸ்

செயலர்

செல்: 74485-18127

❖❖❖❖❖❖

கலப்பை ஊடகப் பணிக்குழு

"மாதா டிவி" க்கு திருமூலநகர், கடகுளம், தோப்புவிளை, காவல்கிணறு ஆலயங்களில் இருந்து திருப்பலி ஒளிபரப்பப்பட்டது.

கலப்பை மாத இதழ் மாத மாதம் பிரசுரிக்கப்படுகிறது.


திருவழிபாட்டு குழு, மற்றும் இளையோர் பணிக்குழு, இணைந்து கலப்பை ஊடகப்பணி குழு பல நிகழ்வுகளை செயல்படுத்தி வருகிறது.

அருள்தந்தை ஜெரால்ட் S. ரவி

இயக்குனர்

செல்: 94430-47701

அருள்பணி விக்டர் தேவராஜ்



ம. விக்டர் தேவராஜ் 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் நாள் திரு. மரிய சிங்கம், திருமதி. மிக்கேல் அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாக டோனாவூர் மிஷன் மருத்துவமனையில் பிறந்தார். இவருக்கு 7 தம்பிகள், 2 தங்கைகள் உண்டு.

தேவராஜ் தொடக்கக் கல்வியை தெற்கு கள்ளிகுளத்திலும் அன்றைய புதுமுக வகுப்பு கல்வியை தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியிலும் கற்றார்.

குருகுல உருவாக்கப் பயிற்சியை மதுரை புனித பேதுரு குருமடத்திலும், தத்துவ இயல், இறையியலை சென்னை பூனமல்லி திரு இருதய குருமடத்திலும் நிறைவு செய்து 1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9ஆம் நாள் தூத்துக்குடியில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

பணிகள்

- இரண்டு ஆண்டுகள் (1969-71) மேதகு ஆயர் தாமஸ் பர்னாந்து அவர்களுக்கு செயலராகப் பணி செய்தார்.
- வள்ளியூர் பாத்திமா அன்னை திருத்தலத்தில் ஓராண்டு (1972-73) உதவிப் பணியாளராகப் பணியாற்றினார்.
- சென்னையில் அருள்பணி பயிற்சி முடித்து இன்னாசியார்புரம் அன்பு இல்லம் மற்றும் தொழில் பள்ளியில் 8 ஆண்டுகள் (1974-82) மிகச் சிறப்பாகப் பணி செய்தார்.
- ஓராண்டு (1982-83) இளையோர் பணிக்குழுவின் இயக்குநராக செயல்பட்டார்.
- ஒரு சிறு இடைவேளைக்குப்பின், கூட்டப்புளி பங்கில் (1984-85) பங்குப் பணி செய்தார்
- வள்ளியூர் பாத்திமா அன்னை திருத்தலப் பங்கில் (1986-90) பணி செய்தார்.
- தூத்துக்குடி பல்நோக்கு சமூக சேவைச் சங்கத்தின் இயக்குனராக (1990-91) செயல்பட்டார்.
- பூனமல்லி திரு இருதய குருத்துவக் கல்லூரியில் இரு முறை (20 ஆண்டுகள் - 1992-2006; 2017-23) ஆன்ம குருவாக குருமாணவர்கள் உருவாக்கத்தில் ஈடுபட்டார்.
- விராகனூரில் இளம் குருமாணவர்களை உருவாக்குவதில் தலைமைப் பொறுப்பிலும், ஆன்மீக தந்தையாகவும் (2006-2012) செயல்பட்டார்.

- ❖ தூத்துக்குடி சிறுமலர் குருமடத் தலைவராக (2012-16) இருந்தார்.
- ❖ புனித சவேரியார் குருக்கள் முதியோர் இல்லப் பொறுப்பாளராக (2024) இயங்கினார்.
- ❖ 09.10.2026 இல் இரவு 10.35 மணிக்கு இறைப்பதம் சென்றார்.

நற்பண்புகள்

அருள்பணி. விக்டர் தேவராஜ் அவர்களுடைய பல நல்ல பண்புகளை எடுத்துரைக்க முடியும். ஆயினும் முகாமையான மூன்று பண்புகளை மட்டும் இங்கே காணலாம்.

1. **உறவு மனிதர்** – கைமாறு கருதா அன்பில் பிறப்பெடுத்த உறவை இவரில் பலர் அனுபவித்ததாக பகிர்ந்துள்ளனர். அத்தகையவர்களில் அடியேனும் ஒருவன்.

   சமூகவியல், சமூக உளவியல் சார்ந்த அண்மைக்கால ஆய்வுகள் உறவுகளால் உறவுக்காக வாழ்வதே மானிட வாழ்வு என்கின்றன. உண்மை உறவே உயரிய மனிதம், இவ்வுறவே புனிதம், இதுவே தெய்வீகம் என வாழ்ந்தவர் பணியாளர் தேவராஜ்.

   ஏழை பணக்காரர் வேறுபாடு இன்றி அனைவரையும் அன்போடு வரவேற்று உரையாடியவர், உறவாடியவர் பணியாளர். இவ்வுறவின் வழியாக ஏழை எளியவர்கள் குறிப்பாக ஏழை மாணவர்கள் பலரை வாழ வைத்தவர் இவர். தூத்துக்குடி பல்நோக்கு சமூக சேவை சங்கத்தின் இயக்குநராக இவர் பணியாற்றிய போது பல ஏழைகளுக்கு உதவி செய்து அவர்களை வாழ்வில் கைத்தூக்கி விட்டிருக்கிறார். இதுபோல தூத்துக்குடி இன்னாசியார்புரம் அன்பு இல்லம் மற்றும் தொழில் பள்ளி இயக்குனராக 8 ஆண்டுகள் பணியாற்றிய போது, ஏறக்குறைய 300 ஏழை மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறை செலுத்தி படிக்க வைத்தார். இவர்களில் பலர் தொழில் பள்ளியில் பயின்று, ஒரு தொழிலை கற்று வாழ்க்கையில் முன்னேற காரணமாக இருந்தார்.

   யாருக்கும் தெரியாத வகையில் பல தனி நபர்களுக்கு பொருளாதார உதவிகள் பல செய்து அவர்களை மாண்போடும் மதிப்போடும் வாழ வைத்திருக்கிறார். தன் பணியில்யிருந்தும் தன் உபகாரிகளிடமிருந்தும் பெற்ற நிதியில் பெரும் தொகையை நமது மறைமாவட்டத்தில் ஒரு கோவில் கட்ட கொடுத்திருக்கிறார்.

   புனித இன்னாசியார் நிறுவனம், சிறுமலர் குறுமடம் போன்றவைகளுக்கு ஆண்டுதோறும் சில இலட்சங்கள் கொடுத்திருக்கிறார், இவர் தூத்துக்குடி திரு இருதய மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் துன்பம் அனுபவித்த நேரத்திலும் அங்கிருந்த ஒரு ஏழை பாட்டிக்கு தன் தங்கை அருள் சகோதரி ஹெலன் மூலம் பண உதவி செய்திருக்கிறார். இவ்வாறு தன் வாழ்வு முழுவதும் சில கோடி பொருளாதார உதவிகள் செய்ததற்கு அவரது சகோதரர்களும் அருள் சகோதரியும் சாட்சிகள் ஆவர்.

   தூத்துக்குடி திருஇருதய சகோதரிகள், ஜெபமாலை தாசர் சகோதரிகள், இவருடைய இளைய அருள் சகோதரி ஹெலன் இருக்கும் கோயம்புத்தூர்

காணிக்கை அன்னை சகோதரிகளோடு அன்பு உறவில் இருந்தார். இவர்களுக்கு தியானம், ஆன்ம உரைகள் கொடுத்திருக்கிறார். ஜெபமாலை தாசர் சகோதரிகளுக்கு அவ்வப்போது நிதி உதவியும் செய்து இருக்கிறார்.

2. **நேர்மையான மனிதர்** – பணி தேவராஜ் விருப்பு வெறுப்புகள் கடந்து தனது மனதில் பட்டதை பட்டென்று எடுத்து சொல்வார். இவர் குருக்கள் மன்ற செயலர் ஆக இருந்த போது நிர்வாக பொறுப்பில் இருந்தவர்களுடைய நேர்மையற்ற செயலை இறைவாக்கினர் போல் எடுத்துரைத்தார். இப்போக்கிற்கு உடன்படாதவராய் குருக்கள் மன்ற செயலர் பொறுப்பிலிருந்து விலகினார். இவரது நேர்மையான போக்கையும், பண்பையும் இவருடைய குருமட நண்பர் இப்போது ஆயர் சூசைமாணிக்கம் அவர்கள் இவரது இறுதிப் பயண திருப்பலியில் சுட்டிக்காட்டினார்கள்.

   இதுபோல நீண்ட காலமாக ஆன்மீக குருவாக பணியாற்றிய சென்னை பூனமல்லி திருஇருதயக் குருத்துவக் கல்லூரி நிர்வாகத்தின் நிறை குறைகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறார். உறவினர்கள். நண்பர்கள் நேர்மை தவறும்போதும் அன்போடு அவர்களை எதிர்கொண்டிருக்கிறார்.

3. **ஆன்மீக வழிகாட்டி** – ஏறக்குறைய 20 ஆண்டுகள் சென்னை பூனமல்லி திருஇருதயக் குருகுலத்தில் பல நூறு குருமாணவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக மிகச் சிறப்பாக பணி செய்திருக்கிறார். மதுரை விராகனூர் தூத்துக்குடி சிறுமலர் குருமடத்தில் குருத்துவ இளையோருடைய உருவாக்கத்தில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டு இருக்கிறார். ஓராண்டு இளையோர் பணிக்குழுவிலும் இளையோரை இறையாட்சியின் இலட்சியக் கனவோடு உருவாக்கியிருக்கிறார்.

இவ்வாறு பணி. தேவராஜ் அவர்கள் நிலைத்த கனி தந்து பணி செய்ய அவருக்கு அருளப்பட்ட ஆழ்ந்த இறைய அனுபவம் அடித்தளமாக அமைந்திருந்தது. இந்தத் தொடர் இறை அனுபவம் இவரை அகத்திலும் புறத்திலும் உள்ள அடிமைத்தனங்கள், பயத்திலிருந்து விடுவித்து இவரை ஒரு விடுதலை பெற்ற சுதந்திர மனிதராக உருவாக்கியிருக்கிறது. இதனால் தான் பல இன்னல்கள், தடைகள், முற்சார்புகளைக் கடந்து பிறரை அன்பில் ஏற்று, அவர்களின் தடம் புரண்ட செயல்பாடுகளை அன்போடும் அக்கறையோடும் இவர் சுட்டிக் காட்ட முடிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக பணி. விக்டர் இறை அனுபூதி பெற்ற இறை மனிதராக வாழ்ந்திருக்கிறார்.

இவர் பணியாற்றிய வள்ளியூர், கூட்டப்புளி பணித்தளங்களில் தான் தியானித்து அகவயப்படுத்திய உயிருள்ள இறைவார்த்தையை எடுத்துரைப்பதிலும் அருள் அடையாளங்களை நிறைவேற்றுவதிலும் இவரது இறை அனுபவம் பிரதிபலித்தது. பிறரும் இறைமையின் நிபந்தனையற்ற அன்பை அனுபவித்து தாங்கள் அனுபவித்த அன்பை பிறரோடு பகிர்ந்து, அவர்கள் அன்பு, நீதி, உண்மை, சக உதிர உறவோடு வாழ முன்னுதாரணமாக வாழ்ந்தார். உறவோடு வாழ்ந்த இவரில் இறைமையின் தரிசனம் வெளிப்பட்டது.

அருளன்பே உருவான இறைவன், அருள்பணி. ம. விக்டர் தேவராஜுக்கு நிறை அன்பு, நிறை உறவு, நிறை அமைதி அருள்வாராக! இறைமை வாழ்க!

அருள்பணி. ச.தே செல்வராசு



SHRINE BASILICA OF OLS





PUSHPAVANAM



VADAKKANKULAM



PCPA CONVENT, KIZHAVANERI



ST. JOSEPH'S CHARITY INSTITUTE, ADAIKALAPURAM



VIRAPANDIANPATNAM



UVARI

REMEMBERING WITH LOVE PRAYING WITH HOPE

"Eternal rest give to them, O Lord, and let perpetual light shine upon them."

Wisdom 3:1



In the month of November, the Church invites us to celebrate the glory of all the Saints and to remember with love all the faithful departed.

The Saints show us that holiness is possible in every state of life. They lived ordinary lives with extraordinary faith, and now they intercede for us in heaven.

On All Souls' Day, we unite in prayer for our departed family members, benefactors, priests, religious and all the faithful, entrusting them to the mercy of God.

Our prayers for the dead are an expression of love that goes beyond death and a sign of our faith in the resurrection.

We remember.
We pray.
We hope.

"For me, to live is Christ and to die is gain."

Philippians 1:21

Edited & Published by
Chancellor
Bishop's House, Tuticorin – 1
Website: www.tuticorindiocese.org

Printed at
Inigo Press
Innaciarpuram, Tuticorin – 2
Phc 2361827 / 28